**உக்குவெல பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 07 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 02 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உக்குவெல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 02 காணிகள், 10 மயான நிலங்கள் மற்றும் 61 பொதுக் கிணறுகள் என்பவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் சபை அலுவலக கட்டிடம் அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 135,000 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குக் கிடைக்கப்பெற்ற போர்ட்டன் வகையைச் சேர்ந்த டிப்பர் வாகனம் மற்றும் உளவு இயந்திரத்தின் பெறுமதி ரூபா 25,668 பெறுமதியான 93 கழிவுப் பொருள் பாத்திரங்கள் என்பவற்றின் பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் காணி மற்றும் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,641,745 தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மத்திய மாகாண பிரதம அமைச்சின் இ - நென பியச செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 594,061 தொகையான கணனிகள் மற்றும் 21 உபபாக விடயங்கள் மற்றும் பிளிசறு செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 200,000 தொகையான சேவர் இயந்திரம், சுற்றுலாச் சபையின் அங்கீகாரம் பெற்ற ஹோட்டல் ஒன்றிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 169,627 தொகையான வருமானம் என்பன நிதிக்கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தன.

(உ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 5,186,983 தொகை குறைவாகவும் 11 தார் பரல்கள் மற்றும் ¾'' கொங்கிரீட் கல் ¼'' சிப்ஸ் கல் இருப்பின் பெறுமதியான ரூபா 239,600 அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பெறவேண்டிய ரூபா 979,763 தொகையான வேலைக் கடன்பட்டோர் மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 776,100 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதி ஒன்று அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்ற 560 கல்வனைஸ் குழாய்களில் சபையிடம் காணப்பட்ட 286 குழாய்களின் பெறுமதியான ரூபா 316,602 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 105,208,260 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 12,331,729 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 07 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 33,015,967 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 31,137 கூட்டுத்தொகையான 05 மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

**1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 37,807,163 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 94,775 தொகையான மீதியும் அதில் உள்ளடங்கியிருந்தது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 89,532,551 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 6/6(i) ஆம் பிரிவு | அனுமதியற்ற 14 நிர்மாணங்கள் அறிக்கை இடப்பட்டிருந்த போதிலும் சபையினால் அது தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகத்ய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமல் படிகள் செலுத்தப்பட்டிருந்த மூன்று தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |

### 1.3.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல், வாங்கல்கள்

அமைச்சரின் அங்கீகாரமின்றி ரமழான் பண்டிகைக்காகவும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்காக நடாத்தப்பட்ட செயலமர்விற்காகவும் ரூபா 85,897 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,192,387 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,436,943 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 10,244,556 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிலும் கடந்த 02 ஆண்டிலும் பிரதேச சபையின் நிதிநிலமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) நிதி விளைவின் மிகையை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் அந்த சதவீதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து கொண்டு செல்வதைக் காண்பித்தது.

(ஆ) மொத்த வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே விகிதாசாரம் தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்வதை காட்டியதுடன் அது நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக திருப்திகரமான நிலையில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) திரண்ட நிதியத்தின் மீதி மறைப் பெறுமதியாக இருந்ததுடன் அது தொடர்ச்சியாக அதிகரிக்கும் பெறுமதியாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது அந்த மறைப் பெறுமதி ரூபா 18,489,425 இனால் அதிகரித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

---

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

---

சபைக்குச் சொந்தமான தண்ணீர் பௌசர் மற்றும் வீதி மட்டப்படுத்தும் இயந்திரம் என்பவற்றின் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 37,350 வருமானம் மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது. வருமானத்தை அதிகரிப்பதற்காக இந்த வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவது தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

#### 2.3.2 ஆதனவரி

---

நிலுவை ஆதனவரி மீதி ரூபா 780,255 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக உள்ள ரூபா 441,443 மீதியும் உள்ளடங்கியிருந்தது.

#### 2.3.3 ஏக்கர் வரி

---

நிலுவையாக உள்ள ஏக்கர் வரி மீதி ரூபா 31,137 ஆக இருந்ததுடன் அந்த மீதி 05 வருட காலமாக மாற்றமின்றி முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

#### 2.3.4 நீர்க் கட்டணம்

---

நிலுவையாக இருந்த நீர்க் கட்டண மீதி ரூபா 1,486,941 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 1,310,487 மீதியும் உள்ளடங்கி இருந்தது.

#### 2.3.5 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் vii (ஊ) மற்றும் XXX ஆம் உப பிரிவுகளின் ஏற்பாடுகளின் படி 02 தனியார் வியாபார நிறுவனங்களினால் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அறிவித்தல் பதாதைகளில் இருந்து ரூபா 68,750 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 காணி விற்பனைக் கட்டணம்**

-----------------------------------------------------

பகிரங்க ஏலத்திலோ அல்லது வேறு விதமாகவோ விற்பனை செய்யப்பட்ட காணியின் விற்பனைப் பெறுமதியில் 01 சதவீத வரியொன்று 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(i) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபைக்கு அறவிட வேண்டிய இருந்த போதிலும் 03 காணி ஏல விற்பனையிலிருந்து தற்காலிக மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் வரித் தொகை அறவிடப்பட்டிருந்தது.

**2.3.7 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

-----------------------------------------------------------------

2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/6 ஆம் இலக்க வர்ததமானி அறிவித்தலின் பிரகாரம் காலாவதியாகி உள்ள சுற்றாடல் அனுமதிப் பத்திரத்திற்காக மீண்டும் அனுமதிப்பத்திரம் பெறப்படாமையினால் ரூபா 35,200 வருமானத்தை சபை இழந்திருந்தது.

**2.3.8 வாடகை**

---------------------

(அ)(i)1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காமல் புதிய சந்தையில் 01 ஆம் இலக்க கோழி இறைச்சிக்கடை ரூபா 750 மாதாந்த வாடகை அடிப்படையில் 2013 இலிலிருந்து 05 வருட காலத்திற்காக நீண்ட கால வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான பழைய சந்தையில் 11 கடைகளின் வாடகையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலுவையாக இருந்த வாடகை மீதி ரூபா 106,276 ஆக இருந்ததுடன் அந்த மீதி வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது காணப்பட்டது.

(இ) மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டின் போது புதிய சந்தையில் ''ஏ'' பகுதியின் கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த

போதிலும், அம் மதிப்பீட்டின் அடிப்படையில் பணம் அறவிடப்படாமையினால் சபை ரூபா 304,800 வருமானமொன்றை இழந்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின்போது கேள்வி மூலம் வழங்கப்பட்ட பொதுச் சந்தையின் 16 ஆம் இலக்க இறைச்சிக் கடை சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் நீண்டகால ரீதியில் வாடகைக்கு வழங்கப்பட்டமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 432,000 தொகையான வருடாந்த வருமானம் ரூபா 18,000 வரை குறைவடைந்திருந்தது.

### 2.3.9 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,476,558 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 7,855,865 தொகையும் அறவிட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீட்டுக் கொள்கை வெளிப்படுத்தலின் பிரகாரம் எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றை நிர்மாணித்தல், வீதிப் பராமரிப்பு அலகொன்றை உருவாக்கல் மற்றும் நகரத்தில் மோட்டார் வாகனங்களை நிர்வகித்தல் போன்ற முன்மொழிவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்துவது பிரதான நோக்கமாக இருந்த போதிலும் அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் மக்களின் பொது வசதிகளை மேம்படுத்துதல், வீதிப் பராமரிப்பு, வடிகாண் முறைமை சுத்தப்படுத்துதல் என்பன எதிர்பார்க்கப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சுடலைக்கூட நிர்மாணம் தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டிடத் திட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்காக மீளாய்வாண்டிலும் கடந்த 02 ஆண்டுகளிலும் கிடைக்கப்பெற்ற 1008 கட்டிட விண்ணப்படிவங்களில் 623 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ் 57 விண்ணப்பங்களுக்காக மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் ''இ''- நெண பியச செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 594,061 பெறுமதியான 10 விடயங்களுக்குரிய 21 பொருட்பதிவேட்டுப் பொருள் அலகுகள் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1995 திசெம்பர் 27 ஆந் திகதிய 95/9 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதம செயலாளரின் கணக்குகள் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 60,748 தொகையான நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாட்டின் மூலம் நிறைவேற்றப்பட்ட 14 வேலைகளுக்கு பிரதேச செயலகத்திலிருந்து நிதி மீளளிப்பு செய்வதற்கு முன்னர் சபை அங்கீகாரமின்றி சபை நிதியத்திலிருந்து ரூபா 438,007 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக் குழுவினதும் சபையினதும் அங்கீகாரம் பெறப்பட்டு 04 வேலைகளுக்காக ரூபா 749,308 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணம் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

எல்கருவ நகரத்தில் உள்ள பழைய நூலகம் மற்றும் ஆயுர்வேத மருந்தகம் என்பன அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டமையினால் உடைந்து விழும் நிலையில் காணப்பட்டதுடன் புதிய சந்தைத் தொகுதியில் 2 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காது மூடப்பட்டிருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் மூலம் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வழங்கப்பட்ட கல்வனைஸ் குழாய்களில் ரூபா 250,210 பெறுமதியான 226 குழாய் அலகுகள் பற்றாக்குறையாக இருந்தது.

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ)

| நிதியேற்பாடு | வேலையின் பெயர் | செலவிடப்பட்ட தொகை | பௌதீக பரிசோதனைத் திகதி | குறைபாடுகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| பிரதேச சபையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | பதிங்கொல்ல விதியை அபிவிருத்தி செய்தல் (நேர் ஊழிய அடிப்படை) | 3,064,869 | 2015 யூலை 20 | வேலை விடய இலக்கம் 9 இன் கீழ் 2 ஆவது தடவை 2,250 சதுர மீற்றர் தார் போடுவதற்காக ரூபா 321,750 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பரிசோதனைத் திகதி வரையிலும் தார் போடப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) சபையின் நேர் ஊழிய அடிப்படையில் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் வீதி அபிவிருத்திற்காக ரூபா 3,535,422 தொகையான நிர்மாணப் பொருட்கள்

வழங்கப்பட்டிருந்த போதும் பொருட்களைப் பயன்படுத்தி உரிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டமைக்கு அளவிடைப்பத்திரங்கள் அல்லது வேலை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 114 ஆம் விதியின் பிரகாரம் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாத 05 செயற்திட்டங்களுக்காக எவ்வித மேற்பார்வையும் இன்றி ரூபா 271,200 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதும் அவை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் போது "ஜாதிக சவிய கமநெகும" செயற்திட்டத்தின் கீழ் இந்திகல கெந்தகொல்ல 2 ஆம் கட்டை அருகில் செல்லும் வீதியை அபிவிருத்தி செய்ததன் பின்னர் மாவட்ட பொறியியலாளரின் களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வீதியின் தடிப்பம் நலிவாக இருந்தமையால் 1:2:4 ($^3/_4$) கலவையில் தடிப்பத்தில் 2 கொங்கிரீட் தட்டொன்றை இடுவது பொருத்தமானது என சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் அந்த செயற்பாடுகள் நிறைவேற்றப்படாது சபை நிதியத்திலிருந்து ரூபா 659,211 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 463,888 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.9 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 03 தொன் அளவிலான கழிவுப் பொருட்களில் கணிசமான அளவு மீள்சுழற்சிக்கு பயன்படுததப்படாது சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

---

உள்ளகக் கணக்காய்விற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு வேறு கடமைகளும் கையளிக்கப்பட்டமையின் காரணமாக போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 05 வருமான விடயங்களின் ரூபா 885,000 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானங்களில் எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் மேலும் 09 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 03 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 20 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,968,250 தொகையான மொத்த நிதி ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 22 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 0.6 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

## 4.4 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களில் 05 இற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 15,575,105 ஆகும்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் கட்டுப்பாடு

(ஊ) களஞ்சியக் கட்டுப்பாடு

(எ) ஒப்பந்த நிருவாகம்